**ஒதுக்கீட்டுத் தலைப்பு - 153 – காணி, காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தியிலிருந்து 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின்கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியிலிருந்து ஒவ்வொரு தலைப்புக்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தரப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 286 | காணி ஆணையாளர் திணைக்களம் |
| 287 | காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் |
| 288 | நில அளவைத் திணைக்களம் |
| 327 | காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேலே 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்பட்ட திகதிகளில் அந்த அமைச்சினதும் திணைக்களங்களதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு,

கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

| **தலைப்பு** | **அமைச்சு/ திணைக்களம்** | **முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 153 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதி |
| 286 | காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் | 2015 செப்தெம்பர் 17 ஆந் திகதி |
| 287 | காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் | 2015 செப்தெம்பர் 02 ஆந் திகதி |
| 288 | நில அளவைத் திணைக்களம் | 2015 செப்தெம்பர் 17 ஆந் திகதி |
| 327 | காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 6,150.3 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 6,025.1 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களங்களின் தேறிய நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 2.3 மில்லியனிற்கும் ரூபா 71.8 மில்லியனிற்கும் இடைப்பட்ட விச்சுடைய அளவில் அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 0.7 சதவீதத்திற்கும் 3.7 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சதவீதமாக சேமிப்பு |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 153 | 2,680.1 | 2,608.3 | 71.8 | 2.68 |
| 286 | 337.7 | 332.1 | 5.6 | 1.66 |
| 287 | 308.0 | 305.7 | 2.3 | 0.75 |
| 288 | 2,511.6 | 2,477.6 | 34.0 | 1.35 |
| 327 | 312.9 | 301.4 | 11.5 | 3.68 |
| மொத்தம் | 6,150.3 | 6,025.1 | 125.2 | |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

தோட்டப் பயிர் படம் வரைதல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கு தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 10,000,000 நிதி ஏற்பாட்டில் ரூபா 4,600,000 தொகை திணைக்களத்தினால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களினால் 2014 ஆம் ஆண்டிற்காக 02 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 167.4 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 201 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 84.92 சதவீதத்திற்கும் 136.09 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவிலான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை/ (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடி யான வருமானம் | மிகை/ (பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.02.01.03 | 52.4 | 44.5 | (7.9) | (15.08) |
| 20.03.02.04 | 115.0 | 156.5 | 41.5 | 36.09 |
| மொத்தம் | 167.4 | 201.0 | 33.6 | 20.07 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 15301 | 13.0 | 11.6 | 4.2 | 8.0 | 44.0 | 27.7 |
| 28601 | 14.0 | 13.9 | 12.0 | 12.0 | 70.0 | 52.6 |
| 28701 | 20.0 | 9.6 | 7.0 | 10.0 | 65.0 | 36.2 |
| 28801 | 150.0 | 119.6 | 100.0 | 87.3 | 400.0 | 328.8 |
| 32701 | 15.0 | 14.7 | 7.0 | 9.9 | 50.0 | 47.9 |

## 2.4 பொதுவைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 209.6 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0064/000 | 0.2 |
| காணி ஆணையாளர் திணைக்களம் | 6000/0000/00/0015/0141//000 | 70.7 |
| நில அளவைத் திணைக்களம் | 6000/0000/00/0015/0143/000 | 138.2 |
| காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் | 6000/0000/00/0015/0186/000 | 0.5 |
| மொத்தம் | | 209.6 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 7 ஆம் பந்தி வரையான பந்திகளில் தரப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 153 – காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

---

### 3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் நாளதுவரையாகப் பேணப்படாமை

---

அமைச்சினால் கீழே தரப்பட்டுள்ள பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 843 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### 3.2.1 பாதீட்டு முரண்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு செலவு விடயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 20,000,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 08 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச்செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 14 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் காணப்பட்டது.

(இ) நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கையில் ஆண்டின் போதான அதிகரிப்புக்கள் ரூபா 28,587,262 கூட்டு மொத்தமாக இருந்ததுடன், ஒதுக்கீட்டுக் கணக்கின் டீ.ஜீ.எஸ்.ஏ 04 படிவத்தில் ஆண்டின் போதான அதிகரிப்புக்கள் ரூபா 16,453,930 கூட்டு மொத்தத் தொகையாகக் காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 12,133,332 தொகையான வேறுபாடு நிலவியது.

## 3.3 கட்டுநிதிக் கணக்கு

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாட்டைப் பூர்த்தி செய்ததும் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த உபகட்டுநிதிகள் உடனடியாகத் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 13 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 273,034 கூட்டு மொத்தமான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் செயற்பாடு முடிவடைந்து 01 மாதத்திலிருந்து 07 மாதங்கள் வரையான கால தாமதத்தில் உப கட்டுநிதிகள் தீர்த்துவைக்கப்பட்டிருந்தன. ஒரு முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு முன்னர் உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

--------------------------------------------------------------------------------------------------------------------------------------

15301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 284,817 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் நிலுவையாகக் காணப்பட்ட அம்மீதிகள் 01 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரையான கால வீச்சினைக் கொண்டிருந்த போதும் அந்த நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு செய்யப்படாதிருந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் ரூபா 144,418 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா 47,592 தொகையான மீதி 07 ஆண்டு காலமாக காணப்பட்டு வருகின்றது.

(இ) சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களின் 09 ஆண்டுகளை மிகைத்த ரூபா 96,928 தொகையான மீதியை 2015 யூலை 15 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.5.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | தளபாடங்களும் பொருத்துக்களும் | 08 | தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை | தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ii) | கணனிகளும் துணைப் பொருட்களும் | 80 | தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை | தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை |
| (iii) | அலுவலக உபகரணம் | 46 | தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை | தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை |
| (iv) | ஏனைய சொத்துக்கள் | 18 | தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை | தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை |

**(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | சொத்துக்களின் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை/ அலகுகளின் எண்ணிக்கை/ அளவு | சொத்துக்களை வழங்கிய நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | |
| (i) | மோட்டார் வாகனம் | 09 | காணி ஆணையாளர் திணைக்களம் | தகவல் சமர்ப்பிக்கப்பட வில்லை | தகவல் சமர்ப்பிக்கப்பட வில்லை |
| (ii) | மோட்டார் வாகனம் | 16 | காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் | தகவல் சமர்ப்பிக்கப்பட வில்லை | தகவல் சமர்ப்பிக்கப்பட வில்லை |
| (iii) | மோட்டார் வாகனம் | தகவல் சமர்ப்பிக்கப்பட வில்லை | காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் | 36 மில்லியன் | தகவல் சமர்ப்பிக்கப்பட வில்லை |
| (iv) | மோட்டார் வாகனம் | 17 | நில அளவைத் திணைக்களம் | தகவல் சமர்ப்பிக்கப்பட வில்லை | தகவல் சமர்ப்பிக்கப்பட வில்லை |

**(இ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு குறைந்த தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 23,790,744 ஆகும்.

## 3.6 செயலாற்றல்

------------------------

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

--------------------------------------------------------------------------------------

அமைச்சின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(i) காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது தற்பொழுது அமுல்படுத்தப்பட்டு வருகின்ற 4,408 காணிச் சுவீகரிப்பு கோவைகளில் இழப்பீடு செலுத்தப்பட்டு வேலை பூர்த்திசெய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 122 ஆக இருந்ததுடன் செயற்பாடற்ற கோவைகளின் எண்ணிக்கை 298 ஆகும். மேலும் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 38(அ) உப பிரமாண கட்டளையின் பிரகாரம் வழங்கப்பட்ட இறுதிக் கோவைகளின் எண்ணிக்கை 760 ஆக இருந்தும், 2014 ஆம் ஆண்டின் போது மாத்திரம் 38(அ) கட்டளைகள் வழங்கவேண்டியுள்ள கோவைகளின் எண்ணிக்கை 914 ஆக இருந்தது. 38(அ) உப பிரமாண கட்டளையின் கீழ் காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக அதிக எண்ணிக்கையான கோவைகளுக்கு இழப்பீடும் அதற்குரிய வட்டியும் அமைச்சினால் செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீள் குடியேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நில அளவைத் திணைக்களத்தின் நில அளவைகளின் செயல்முன்னேற்றத்தின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நில அளவை நடவடிக்கைகளுக்கான 5,842 காணித்துண்டுகளில் 2,784 காணித்துண்டுகளுக்கான நில அளவை நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் செயல்முன்னேற்றம் 48 சதவீதமாக இருந்தது. மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,953 காணித்துண்டுகளில் 856 காணித்துண்டுகளுக்கும், வவுனியா மாவட்டத்தில் 8,949 காணித்துண்டுகளில் 4,602 காணித்துண்டுகளுக்கும் மாத்திரம் நில அளவை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் செயல்முன்னேற்றங்களும் முறையே 22 சதவீதம் மற்றும் 51 சதவீதமாகக் காணப்பட்டன.

(iii) பாதுகாப்பு படையினருக்காக மேற்கொள்ளப்பட்ட 1950 இன் 9 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்தல் நில அளவைகளில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான 86 நில அளவை வேண்டுதல்களில் 45 வேண்டுதல்களுக்கு மாத்திரம் நில அளவை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. அவ்வாறே பாதுகாப்பு படையினருக்காக மேற்கொள்ளப்பட்ட 5 ஆவது பிரிவின் கீழ் உள்ளவாறான சுவீகரித்தல் நில அளவைகளில் மன்னார் மாவட்டத்திற்கான 21 நில அளவை வேண்டுதல்களில் 9 வேண்டுதல்களுக்கும் யாழ்ப்பாணத்தில் 4 வேண்டுதல்களில் 2 வேண்டுதல்களுக்கும், மாத்திரம் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நில அளவை வேண்டுதல்களுக்கும் ஆண்டின் போது நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆண்டின் போது காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்காக காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு ரூபா 50,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் திணைக்களம் அவற்றில் ரூபா 41,687,946 தொகையை செலவு செய்திருந்தது. சேமிப்பானது ரூபா 8,312,054 அல்லது மொத்த நிதி ஏற்பாட்டில் 16.6 சதவீதமாக இருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 199,641 பிணக்குகளில் 81,954 பிணக்குகள் தீர்த்துவைக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க செலவுகளுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றலானது குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) திட்டமிடல்**

-------------------

2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காணிக் கொள்கைப் பிரிவின் சில இலக்குகளின் செயல்முன்னேற்றமானது காணி அபிவிருத்திப் பிரிவின் செயல்முன்னேற்றத்தில் காட்டப்பட்டிருந்த போதிலும் முழுமையான இலக்குகளின் செயல்முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) காணிச் சுவீகரிப்பு பிரிவின் 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதி இலக்குகள் காட்டப்பட்டிருந்தும் பிரதான செயற் பணிகளின் படி பௌதீக இலக்குகள் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் செயலாற்றல் அறிக்கையின் பிரதான செயற்பணிகளின் படி நிதிசார் செயலாற்றல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டிற்கான பிம் சவிய இலக்கானது பிரதான செயற்பணிகளின் படி காட்டப்பட்டிருந்தும் செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கும் போது செயல்முன்னேற்றமானது அதற்கு இணங்க காட்டப்பட்டிருக்கவில்லை.

## 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் சில கீழே தரப்படுகின்றன.

### (அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவைகளின் நடைமுறைகளை மீறல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சு 2014 ஆம் ஆண்டில் 02 மடி கணனிகளையும் 04 லேசர் பிரிண்டர்களையும் கொள்வனவு செய்வதற்கு தீர்மானம் எடுத்திருந்த போதிலும் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது அத்தேவைப்பாடுகளையும் அதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதியையும் இனங்கண்டுகொண்டிருக்கவில்லை. கேட்பு மனுக்கள் கிடைத்திருந்த இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஆகக் குறைந்த விலையின் அடிப்படையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 46 கணனிகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- வருடாந்த கொள்வனவுத் திட்டத்தை தயாரிக்கும் போது இத்தேவைப்பாடுகளையும் அதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதி எவ்வளவு என்பதும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அமைச்சிற்கு எந்த நிறுவனத்திடமிருந்து 46 கணனிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்பதனை உறுதியாக இனங்கண்டு சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 500,000 தொகையை மிகைத்த பொருட்கள் அல்லது சேவைகள் ஒப்பந்தத்திற்காக முறைப்படியான ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்படவேண்டிய போதிலும், ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்வதற்கு முன்னர் ரூபா 4,236,600 தொகைக்கு 46 கணனிகளை அமைச்சிற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 09 ஆந் திகதி கணனிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 15 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேலும் கேள்விகளைத் திறப்பதற்காக இரண்டு மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் கேள்வி திறத்தல் குழுவை நியமிக்கும் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.3 (அ) வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2014 ஆம் ஆண்டின் போது அமைச்சு 02 மடி கணனிகளையும் 04 லேசர் பிரிண்டர்களையும் கொள்வனவு செய்திருந்த போதிலும் அப்பொருட்கள் உரிய திகதிக்கு முன்னர் அமைச்சிற்கு கிடைத்திருக்காததுடன் தாமதமடைந்த 22 நாட்களிற்கான தாமதக் கட்டணங்கள் அறவீடு செய்வது தொடர்பாக எதுவித நிபந்தனையும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 முகாமைத்துவ பலவீனம்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சின் வாகனத் திருத்தங்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வாகனத்தை திருத்தம் செய்யும் போது சிறிய கொள்வனவுக் குழுவின் மூலம் ரூபா 146,380 அதிக விலை சமர்ப்பித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்நிறுவனத்தினால் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 43,050 தொகையான மேலதிக மதிப்பீட்டினையும் சேர்த்து திருத்தம் செய்வதற்காக ரூபா 189,430 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் அந்த வாகனத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது 17 சந்தர்ப்பங்களில் ரூபா 559,544 தொகை பழுதுபார்த்தல் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 363,670 தொகையான பழுதுபார்த்தல்களையும் மேற்கொள்வதற்கு அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது.

(ii) அமைச்சிற்குச் சொந்தமான இன்னுமொரு வாகனம் திருத்தம் செய்யப்படுவதற்காக ஒரு நிறுவனத்திடம் மாத்திரம் கேட்பு மனுக்கள் கோரி திருத்தம் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 399,578 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு அந்த வாகனத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்காக ரூபா 473,430 தொகைக்கு அந்த நிறுவனத்திற்கே வழங்குவதற்குத் தீமானிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த வாகனங்களின் திருத்தங்களைப் பூர்த்திசெய்வதிலுள்ள தாமத காலத்திற்காக தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணிச் சுவீகரிப்புச் சம்பந்தமாக 1950 மார்ச் 09 ஆந் திகதிய காணிச் சுவீகரித்தல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 ஆம் ஆண்டில் காணிச் சுவீகரிப்பிற்கான இழப்பீட்டுப் பணமாக ரூபா 1,704,695,720 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 100 கோவைகளுக்கான வட்டியாக ரூபா 525,038,643 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவற்றுள் 2005 ஆம் ஆண்டின் போது சுவீகரிக்கப்பட்டிருந்த காணி தொடர்பாக மாத்திரம் ரூபா 110,375,825 தொகையான வட்டிப் பணம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

காணிச் சுவீகரிப்பை துரிதப்படுத்துவதற்காகவே 38(அ) உப பிரமாண கட்டளையின் கீழ் காணிச் சுவீகரிப்பு துரிதமாக மேற்கொள்ளப்பட்ட போதிலும், காணிச் சுவீகரிப்பிற்காக இழப்பீடு செலுத்தும் இறுதித் திகதி வரை வட்டி செலுத்த வேண்டியிருந்ததனால் 38(அ) உபபிரமாண கட்டளையின் கீழ் காணிச் சுவீகரிப்பிற்காக அமைச்சு அதிக செலவை மேற்கொண்டிருந்தது.

(ii) தம்புள்ளை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 2006 ஒக்தோபர் 31 ஆந் திகதி சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான இழப்பீடாக ரூபா 3.9 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதி வரை வட்டியுடன் காணிச் சுவீகரிப்பு இழப்பீடாக ரூபா 6.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட செலவானது 66.67 சதவீதத்தால் மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது கம்பஹா இரத்னாவலி மகளிர் வித்தியாலயத்திற்காக ஒரு காணியை சுவீகரிப்பதற்கான மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 3,250,000 ஆக இருந்த போதிலும் காணிக்கான இழப்பீடும் வட்டியுமாக ரூபா 12,380,742 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியானது ரூபா 9,130,742 ஆல் மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்தது.

(iv) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஹொரண பஸ் நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக 02 ரூட் 17.5 பேர்ச் அளவான பிரிக்கப்படாத ஒரு காணியானது காணி அமைச்சினால் ரூபா 10,225,000 தொகை செலுத்தி சுவீகரிக்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இக்காணியின் 06 பேர்ச் அளவிலான காணியில் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக காணி உரிமையாளருக்கு மீள வழங்கப்பட்டிருந்த போதிலும் அவரினால் 10.48 பேர்ச் அளவிலான காணியில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்காணிச் சுவீகரிப்பிற்காக இழப்பீடும் வட்டியுமாக ரூபா 2,519,825 தொகைக்கு அண்மித்ததான செலவை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ''சுவீகரிக்கப்பட்ட காணியின் ஒரு பகுதியையும் உள்ளடக்கும் வகையில் அரசாங்கத்திற்கு கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டியிருந்ததனால் அக்காணித் துண்டை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததாக'' அமைச்சு செயலாளர் எனக்கு தெரிவித்திருந்தார்.

(v) மேற்கொள்ளப்பட வேண்டிய செலவுகள் தொடர்பாக சரியான மதிப்பீட்டினைத் தயாரிக்காது அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு 25 சந்தர்ப்பங்களின் போது

ரூபா 203,407 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. அம்முற்பணங்களில் 27 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய அளவிலான அம்முற்பணங்கள் செலவுசெய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க நிதிப்பிரமாணம் 371(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

## 3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் | உள்ளபடியான பதவியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 18 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 440 | 392 | 48 |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 44 | 08 |
| | மொத்தம் | 518 | 458 | 60 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 60 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.	தலைப்பு 286 – காணி ஆணையாளர் திணைக்களம்**

---

**4.1	ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

04 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டை உபயோகித்ததன் பின்னர் சேமிப்பானது அச்செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதத்திலிருந்து 57 சதவீதம் வரையான வீச்சுடைய அளவைக் கொண்டிருந்தன.

**4.2	பொது வைப்புக் கணக்கு**

---

19 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 65,350,234 கூட்டுமொத்தமான வைப்பு மீதிகள் 2 ஆண்டுகளை மிகைத்திருந்த போதிலும் அவ்வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3	வருமானக் கணக்கு**

---

திணைக்களத் தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீட்டிற்கான வருமான மதிப்பீட்டினைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஆகிய செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீடு தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**20.02.01.03 ஆம் இலக்க வருமானக் குறியீடு - காணி மற்றும் ஏனைய குத்தகைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)	வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீடு தொடர்பாக ரூபா 50 மில்லியன் வருமானத்தைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 44 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடுசெய்யப்பட்ட வருமானத்தில் 89 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 20,278,626 கூட்டு மொத்தமான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அவ்வாறு நிலுவையாகக் காணப்பட்ட வருமானம் 1 ஆண்டிலிருந்து 4 ஆண்டுகள் வரையான கால வீச்சுடையதாகும். அவ்வாறு நிலுவையாகக் காணப்பட்ட வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதிவரையான நிலுவை வருமானம் ரூபா 20,278,626 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 42 சதவீதம் அதிகரித்திருந்தது. மேலும் 02 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாகவுள்ள வருமானம் ரூபா 5,630,837 ஆக இருந்தது.

(ஈ) வருமானத்தை சேகரிக்கும் உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 175(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானத்தை சேகரிக்க வேண்டிய போதிலும் ஏழு பிரதி ஆணையாளர் அலுவலகங்களின் ரூபா 1,396,214 கூட்டு மொத்தமான நிலுவை வருமானங்களில் மீளாய்வாண்டின் போது எந்த வருமானத்தையும் அறவிடமுடியாதிருந்தது.

(உ) 2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 50,000,000 தொகையான திருத்திய மதிப்பீடு கணக்குகளில் ரூபா 45,000,000 ஆகவும் ரூபா 52,400,000 தொகையான தொடக்க மதிப்பீடு கணக்குகளில் ரூபா 36,000,000 ஆகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான மதிப்பீடுசெய்யப்பட்ட வருமானம் ரூபா 50,000,000 ஆக இருந்த போதிலும் தேறிய வருமானம் ரூபா 44,477,083 ஆக இருந்ததன் காரணத்தால் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 89 சதவீதமான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டிற்கான மதிப்பீடுசெய்யப்பட்ட வருமானம் ரூபா 42,000,000 ஆக இருந்த போதிலும் தேறிய வருமானம் ரூபா 49,503,519 ஆக இருந்ததன் காரணத்தினால் மதிப்பீடுசெய்யப்பட்ட வருமானத்தில் 117 சதவீதம் அளவிலான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மதிப்பீடுசெய்யப்பட்ட வருமானத்திற்கு நேரொத்த வகையில் தேறிய வருமானத்தில் குறைவு அவதானிக்கப்பட்டது.

(எ) 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 2014 ஆம் ஆண்டில் தேறிய வருமானத்தில் குறைவு ரூபா 5,026,436 ஆக இருந்ததுடன் இது 10 சதவீதமாக இருந்தது. எனினும் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டிற்குரிய வருமானத்தில் (நிலுவைக் குத்தகையைத் தவிர்த்து) குறைவு ரூபா 12,228,842 ஆக இருந்ததுடன் அது 36 சதவீதமாகும். புதிய குத்தகை வருமானத்தில் குறைவு, முரண்பாட்டிற்கு காரணமாக இருந்ததாக ஆணையாளர் நாயகம் எனக்குத் தெரிவித்திருந்தார்.

(ஏ) 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான நிலுவை வருமானத்திற்கு நேரொத்த வகையில் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் அளவு 66 சதவீதமாக இருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் ஆரம்ப நிலுவை வருமானத்திற்கு நேரொத்த வகையில் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் அளவு 28 சதவீதம் மாத்திரமாகும். அதற்கிணங்க 2014 ஆம் ஆண்டிற்கான தேறிய வருமானம் வீழ்ச்சியடைந்தமைக்கு நிலுவை வருமானங்களைச் சேகரிப்பதிலுள்ள பலவீனங்களும் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

---

28601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,453,238 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் 01 ஆண்டிலிருந்து 04 ஆண்டுகள் வரையான கால வீச்சினைக் கொண்டிருந்த போதிலும் நிலுவையாகக் காணப்பட்ட அக்கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வுபெற்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதிகள் ரூபா 711,521 ஆக இருந்ததுடன் அவற்றுள் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 48,968 கடன் மீதியும் உள்ளன. இக்கடன் மீதிகளை உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்ற சந்தர்ப்பத்தில் ஓய்வூதிய பணிக்கொடைப் பணத்திலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட 8 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய மொத்த கடன் மீதிகள் ரூபா 642,927 ஆக இருந்ததுடன் அவற்றில் 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 349,719 கடன் மீதிகளும் காணப்பட்டன. வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய ஒழுக்காற்று பரிசோதனைகளை நடாத்தி பூர்த்திசெய்து சம்பந்தப்பட்ட கட்டளைகளை விரைவாக அமுல்படுத்தி கடன்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை

எடுக்கப்படவேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சேவையை விட்டுச்சென்ற 8 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய மொத்த கடன் மீதி ரூபா 272,113 ஆக இருந்ததுடன் அவற்றில் 6 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 182,955 தொகையான கடன் மீதி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும்.

(உ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை உரிய மாகாண சபைகளிடமிருந்து ஒரே தடவையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அச்சுற்றுநிருபத்தின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் அவ்வாறு ஒரே தடவையில் அறவிடமுடியாது போனால் உரிய மாகாண சபையிடமிருந்து மாதாந்தம் கடன் தவணைப் பணத்தையும் வட்டியையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 மாகாண சபைகளுக்கு விடுவிக்கப்பட்ட 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 210,368 தொகையான கடன் மீதியை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் 1.1.6 மற்றும் 1.1.7 ஆம் பந்திகளின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்று 03 மாதங்கள் கடந்த பின்னர் தீர்த்துவைக்கப்படாத கடன் மீதிகள் காட்டப்படலாகாத போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற 09 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாத கடன் மீதிகள் ரூபா 183,524 கூட்டு மொத்தமானதுடன் அவற்றில் 06 மாதங்களை மிகைத்த ரூபா 1,000 தொகையான ஒரு கடன் மீதியை தவிர்த்து மிகுதியான ரூபா 182,524 தொகையான கடன் மீதிகள் 23 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதிகள் என அவதானிக்கப்பட்டது.

(எ) 2014 யூன் 03 ஆந் திகதி மேல் மாகாண சபையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தரின் ரூபா 225,072 தொகையான கடன் மீதியும் 2014 செப்தெம்பர் 03 ஆந் திகதி தென் மாகாண சபையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த ஒரு உத்தியோகத்தரின் ரூபா 207,300 தொகையான ஒரு கடன் மீதியும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

**(அ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

---

காணி அமைச்சிற்குச் சொந்தமான 09 வாகனங்களும் நிலஅளவை திணைக்களத்திற்குச் சொந்தமான 02 வாகனங்களும் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

---

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 3,348,630 ஆக இருந்ததுடன் அனைத்து பொறுப்புக்களும் 01 ஆண்டிற்கு குறைந்த காலமாக காணப்பட்டு வருபவையாகும்.

## 4.6 செயலாற்றல்

---

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் கடந்த ஆண்டிற்கு நேரொத்த வகையில் செயல்முன்னேற்றம் காட்டப்பட்டிருந்தும் ஒவ்வொரு நடவடிக்கையினதும் வருடாந்த இலக்கு காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது பிரிவு தின நிகழ்ச்சித் திட்டம், காணிப் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் நடமாடும் சேவை, மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனம், காணிச் செயற்திட்டம் மற்றும் மாகாண சபை மட்டத்தில் அரசாங்கத்தின் காணிப்பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் என்பன தொடர்பாக முன்னைய ஆண்டில் தீர்த்துவைக்க முடியாது எஞ்சியுள்ள பிணக்குகளின் எண்ணிக்கை காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிலுவைக் குத்தகைகளை அறவிடுவதற்கு திட்டமிடப்பட்ட அளவு ஆண்டின் ஆரம்பத்திலுள்ள நிலுவை

வருமானத்தில் 75 சதவீதமாக இருந்த போதிலும் ஆண்டின் போது நிலுவை வருமானத்தில் சேகரிக்கப்பட்ட அளவு 28 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(ஈ) 2015 யூன் 10 ஆந் திகதி வரை வரைபடம் வழங்குதல் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் 2014 ஆம் ஆண்டிற்கான முதலாவது காலாண்டிற்காக மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 106 பிரதேச செயலகங்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நன்கொடைப் பத்திரங்கள் தயாரிப்பதற்கு தயாரிக்கப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை 9,831 ஆக இருந்ததுடன் அவற்றில் 7,702 அளவானவை தயாரிக்கப்படாது எஞ்சியிருந்தது. அது சதவீதமாக 78 சதவீதமாக இருந்தது. அதற்கிணங்க வரைபடங்கள் வழங்கும் சதவீதம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(உ) கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் கீழ் காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்த்துவைப்பது தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வடக்கு கிழக்கு மாகாணங்களின் 167,786 பிணக்குகள் 2014 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 100,266 பிணக்குகள் ஆண்டின் இறுதிவரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. அது 60 சதவீதமாகும்.

(ii) காணிப்பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்காக 31,825 பிணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 17,411 எண்ணிக்கையான பிணக்குகள் சம்பந்தமாக ஆண்டின் இறுதிவரை காணிப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவை பிணக்குகளின் எண்ணிக்கையில் 55 சதவீதமாகும்.

(iii) முன்னைய ஆண்டின் இறுதியில் தீர்த்துவைப்பதற்கு முடியாதிருந்த பிணக்குகள் தொடர்பாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மீதியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 4.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது முறையற்ற தன்மையான கொடுக்கல் வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களில் சில கீழே தரப்படுகின்றன.

**(அ) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊக்குவிப்பு படிகள் செலுத்துதல்**

---------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 2013 ஆம் ஆண்டிலும் 2014 ஆம் ஆண்டிலும் முறையே ரூபா 1,186,240 மற்றும் ரூபா 3,809,495 தொகைகளான ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க 2013 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் 21 சதவீதத்தால் ஊக்குவிப்பு படிகள் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அனுமதிப் பத்திரம், நீண்டகால அனுமதிப் பத்திரம், நன்கொடைப் பத்திரம் என்பவற்றின் எண்ணிக்கை 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகள் தொடர்பாக முறையே 51,042 மற்றும் 47,614 ஆக இருந்ததுடன் அதற்கிணங்க 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) நன்கொடைப் பத்திரம், அனுமதிப் பத்திரம், நீண்டகால அனுமதிப் பத்திரம் என்பவற்றை வழங்குவதற்காக இந்த ஊக்குவிப்பு படி முறைமையின் கீழ் 2013 ஆம் ஆண்டு தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் ரூபா 3,809,495 தொகை ஊக்குவிப்பு படியாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் மொத்தப் பெறுமதியில் 67 சதவீதமானவை, அதாவது ரூபா 2,551,195 தொகை மூன்று உத்தியோகத்தர்களுக்கு இடையே மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

(iii) நன்கொடைப் பத்திரம், அனுமதிப் பத்திரம், நீண்டகால அனுமதிப் பத்திரம் என்பவற்றை வழங்குதல் திணைக்களத்தின் பிரதான குறிக்கோளாக இருந்த போதிலும் உயர் முகாமைத்துவத்தின் சில உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் உயர்ந்த சதவீதம் உரித்தாகும் வகையில் ஊக்குவிப்பு படித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் 485 அளவிலான ஊழியர்களுக்கு மத்தியில் ஊக்குவிப்பு படிக்காக 42 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உரித்து வழங்கப்பட்டிருந்தது. ஊக்குவிப்பு படி பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்ற முறை பிரிவுத் தலைவர்களின் தீர்மானத்தின் அடிப்படையில் இடம்பெற்று வருவதனால் அந்த உத்தியோகத்தர்களுக்கு மத்தியிலும் ஊக்குவிப்பு படிகள் பகிர்ந்தளிக்கப்படுவதில் வழமைக்கு மாற்றமான ஒழுங்கீனங்கள் காணப்பட்டன.

(iv) காணி அமைச்சின் தகவல்களின் பிரகாரம் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை

43,186 ஆக இருந்த போதிலும் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அது 42,631 ஆக இருந்ததனால் வித்தியாசம் 555 ஆகும். மேலும் காணி அமைச்சின் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட நன்கொடைப் பத்திரங்களின் எண்ணிக்கை 5,546 ஆக இருந்ததுடன் திணைக்கள செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நன்கொடைப் பத்திரங்களின் எண்ணிக்கை 4,983 ஆக இருந்ததனால் 549 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

## 4.9 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கிரிந்தி ஓயா வீடமைப்புக் கடன் செயற்திட்டம்

1993 ஆம் ஆண்டில் கிரிந்தி ஓயா வீடமைப்புக் கடன் செயற்திட்டத்தின் கீழ் 1436 பொது மக்களுக்காக நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூபா 11,603,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற நிலைமையும் அறவீடும் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(i) 20 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தின் போது மேற்கூறிய கடன் பணத்தில் 69 சதவீதமாகிய ரூபா 8,043,725 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 3,559,275 அதாவது 31 சதவீத நிலுவைக் கடன் மீதி 2014 ஆம் ஆண்டின் இறுதியிலும் காணப்பட்டது.

(ii) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 193,300 தொகையான பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த கடன் பணத்தில் 1.6 சதவீதமாகும். அதற்கிணங்க கடன் அறவிடும் பின்தொடர் நடவடிக்கை மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது,

### (ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களைப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 310 உத்தியோகபூர்வ இல்லங்களில் 90 இல்லங்களில் வாடகை அறவிடப்படுவதுடன் அது வீடுகளின் எண்ணிக்கையில் 29 சதவீதமாகும்.

(ii) எஞ்சியுள்ள 220 உத்தியோகபூர்வ இல்லங்களில் 70 உத்தியோகபூர்வ இல்லங்கள் திருத்தம் செய்யவேண்டிய நிலையிலும், 22 இல்லங்கள் அழிவடைந்தும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் 23 இல்லங்கள் வெற்றிடமாகக் காணப்பட்டது. அதற்கிணங்க மொத்த இல்லங்களில் 37 சதவீதமானவை விளைவற்றுக் காணப்பட்டன.

(iii) மேலும் அனுமதியற்ற 37 குடியிருப்பாளர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருப்பதுடன் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து அனுமதியற்ற குடியிருப்பாளர்களை வெளியேற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 50 | 38 | 12 |
| (ii) | மூன்றாம் நிலை | 38 | 13 | 25 |
| (iii) | இரண்டாம் நிலை | 700 | 430 | 270 |
| (iv) | ஆரம்ப நிலை | 135 | 97 | 38 |
| | மொத்தம் | 923 | 578 | 345 |

மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 345 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. தலைப்பு 287 – காணி உரிமை நிர்ணயத் திணைக்களம்

---

### 5.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

---

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 110 இன் படி நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 5.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### 5.2.1 பாதீட்டு முரண்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச்செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 13 சதவீதத்திலிருந்து 82 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 செலவு விடயங்களுக்குரிய சேமிப்புக்களை மிகைத்து ரூபா 438,824 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 5.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

---

28701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 726,417 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் 1 ஆண்டிலிருந்து 7 ஆண்டுகள் வரையான கால வீச்சினைக் கொண்டிருந்தும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 216,922 தொகையான மீதியையும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டு காலத்தை விஞ்சிய ரூபா 31,391 தொகையான கடன் மீதியையும் அறவீடு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 5.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

---

2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதிவரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் கொள்வனவுத் திட்டத்திலுள்ள மதிப்பீடுகளை மிகைத்து 11 சந்தர்ப்பங்களில் ரூபா 3,606,658 தொகையான கொள்வனவு இடம்பெற்றிருந்ததுடன் 19 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 1,935,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தின் கொள்வனவுத் திட்டத்திலுள்ள மதிப்பீட்டினை மிகைத்து 05 சந்தர்ப்பங்களில் ரூபா 3,550,098 தொகையான கொள்வனவுகள் இடம்பெற்றிருந்ததுடன் 16 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 3,093,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட கொள்வனவுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

### 5.4.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தோற்றுவிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| அலுவலக உபகரணம் | 21 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |
| கணனியும் துணைக் கருவிகளும் | 121 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 77 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |
| ஸ்டேன்டட் சைக்கிள் | 04 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |
| ஏனைய சொத்துக்கள் | 242 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சிற்குச் சொந்தமான சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| **சொத்துக்களின் வகை** | **எண்ணிக்கை /அலகுகளின் எண்ணிக்கை/ அளவு** | **பெறுமதி** | **காலப்பகுதி** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| வாகனம் | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | 36,000,000 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |
| மனைப் பொருட்களும் அலுவலக உபகரணங்களும் | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | 55,404,247 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | 328,795 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |

**(இ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத 01 ஆண்டிற்கு குறைந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 797,756 ஆக இருந்தது.

## 5.6 செயலாற்றல்

2014 இன் வருடாந்த வரவு செலவு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

## (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

---

1931 ஒக்தோபர் 31 ஆந் திகதிய காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(i) நிர்ணயம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் கிராமங்கள் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| **விபரம்** | **கிராமங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| நிர்ணயம் செய்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருபவை | 57 |
| வடக்கு கிழக்கு மாகாணங்களில் அறிவித்தல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளவை | 30 |
| அறிவித்தல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தும் பதிவேடுகள் காணாமல் போயுள்ளவை | 57 |
| நிர்ணயக் கட்டளைச் சட்டம் பகிரங்கப் படுத்தப்பட்டிருந்தும் விடுவிக்கப்படாத கிராமங்ளின் எண்ணிக்கை | 20 |
| மொத்தம் | 164 |

(ii) 1931 ஒக்தோபர் 23 ஆந் திகதிய காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் அடிப்படைக் குறிக்கோளாவது உரித்து விண்ணப்பங்களைக் கோருதல், புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், காணிகளை விடுவித்தல் என்பன உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இருந்த போதிலும் அறிவித்தல்கள் பகிரங்கப்படுத்தியிருந்தும் பதிவேடுகள் காணாமல் போயுள்ள 57 கிராமங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

### (ஆ) திட்டமிடல்

------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்கிடப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **விபரம்** | **செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட குறிக்கோள்கள் (காணித் துண்டுகள்)** | **செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான செயல்முன்னேற்றம் (காணித் துண்டுகள்)** |
|---|---|---|
| வெளிக்களப் புலனாய்வு | 130,000 | காட்டப்படவில்லை |
| காணிப்பதிவுப் பரிசோதனை | 125,000 | காட்டப்படவில்லை |
| இறுதித் தீர்மானம் பெற்றுக் கொள்ளப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை | 123,840 | 53,062 |
| வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை | 123,840 | 66,759 |
| காணிப்பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை | 123,840 | 59,747 |

(ii) திணைக்களத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 14 ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை 123,840 ஆக இருந்த போதிலும் 66,759 காணித்துண்டுகள் அதாவது 54 சதவீதம் மாத்திரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

(iii) நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை செய்யப்பட்ட 108,432 காணித்துண்டுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தும் அவற்றில் 59,747 காணித்துண்டுகளாகிய 55 சதவீதத்தை மாத்திரம் காணிப் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iv) திணைக்களத்தின் 2014 இன் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 14 ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான அங்கீகாரத்தின் பின்னர் அனுப்பப்பட்டிருந்த துணைப் பதிவேடுகளின் எண்ணிக்கை 53,062 ஆகும். 2014 திசெம்பர் மாதத்திற்கான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அந்த எண்ணிக்கை 53,448 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க 386 வித்தியாசம் காணப்பட்டது.

(v) திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சான்றிதழ் வழங்குவதற்காக காணிப் பதிவாளருக்கு அனுப்புவதற்காக இலக்கிடப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை 123,840 ஆக இருந்தது. காணி அமைச்சின் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை 129,240 ஆக இருந்ததனால் 5,400 வேறுபாடு காணப்பட்டது.

## 5.7 நட்டங்களும் சேதங்களும்

2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் மற்றும் கைவிடுதலின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 571,066 தொகையான வாகன விபத்து நட்டங்களில் ரூபா 40,000 தொகையானது சாரதிகளின் சம்பளங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தும் நட்டத்தின் மொத்தப் பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கின் நட்டங்கள் மற்றும் கைவிடுதலின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 5.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கையும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 106 | 20 | 86 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | இரண்டாம் நிலை | 1,751 | 630 | 1,121 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 200 | 156 | 44 | - |
| (v) | ஏனையவை (அமையம்/தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 27 | - | 27 |
| | | ----------- | ---------- | ------------ | --------- |
| | மொத்தம் | 2,059 | 833 | * 1,253 | 27 |
| | | ====== | ==== | ===== | ==== |

* மீளாய்வாண்டின் இறுதிவரையும் 1,253 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. தலைப்பு 288 – நில அளவைத் திணைக்களம்

### 6.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாதிருந்தமை

நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 02 வாகனங்களுக்கு இடம்பெற்ற விபத்துக்களின் காரணமான நட்டம் ரூபா 25,625 தொகையும் காணாமல் போன பொருட்களின் நட்டமாகிய ரூபா 199,747 தொகையும் தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீட்டிற்கான வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல், கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஆகிய செயற்பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) 20-03-02-04 இலக்க வருமானக் குறியீடு – நில அளவையாளர் வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீடு தொடர்பாக ரூபா 135 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 132.8 மில்லியன்

சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 98 சதவீதமாக இருந்தது.

(ii) 2015 இன் வருமான மதிப்பீட்டின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ரூபா 135 மில்லியனாக இருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கில் 2014 ஆம் ஆண்டிற்கான திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 115 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது.

(iii) வருமானத்தை முன்னறிதல் மற்றும் மதிப்பீடுசெய்தலின் போது 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசாங்க நிதிக்கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் சுற்றுநிருபத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த கால போக்கு மற்றும் அவற்றின் விசேட தன்மை தொடர்பாக கவனம் செலுத்தப்படவேண்டிய போதிலும் கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போதும் குறை வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட திருத்திய வருமான மதிப்பீடானது 2013 ஆம் ஆண்டிற்கான திருத்திய வருமான மதிப்பீட்டின் பெறுமதியை விட குறைந்த பெறுமதியுள்ள மதிப்பீடாக இருந்தது.

(iv) வன பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட்டிருந்த நில அளவைக் கட்டணம் ரூபா 2,202,056 தொகையானது நில அளவையாளர் வருமானத்திற்குச் செலவுவைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(v) இலங்கை UN-REDD நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1:100,000 அளவில் தயாரிக்கப்பட்டுள்ள காணிப் பயன்பாட்டுப் படங்களை எண் தரவுகளாக மாற்றச்செய்வதற்கான செயற்திட்டத்திற்காக 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதி கிடைத்த ரூபா 934,840 தொகை நில அளவையாளர் நாயகத்தின் வருமானத்திற்கு செலவுவைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(vi) 2014 ஆம் ஆண்டிற்கான நில அளவைக் கட்டண வருமானம் மற்றும் வைப்புக்கணக்கில் முன்கொண்டு செல்லப்பட்ட மீதி முறையே ரூபா 320,646,374 மற்றும் ரூபா 109,449,171 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நில அளவையாளர் நாயகத்தின் வருமானத்திற்கு ரூபா 100,283,165

தொகை மாத்திரம் செலவுவைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது நில அளவையாளர் நாயகத்தின் வருமானத்திற்கு செலவுவைக்கப்பட்ட அளவு மொத்த நில அளவை கட்டண வருமானத்தில் 24 சதவீதமாக இருந்தது.

(vii) நில அளவையாளரினால் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கணக்கினதும் பொதுவைப்புக் கணக்கினதும் மீதிகளுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **விபரம்** | **சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீதி** | **கணக்கின் பிரகாரம் மீதி** |
|---|---|---|
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நில அளவைக் கட்டணம் பொதுவைப்புக் கணக்கில் முன் கொண்டுவரப்பட்ட மீதி | 109,449,171 | 70,093,201 |
| நில அளவைக் கட்டணமாக நில அளவையாளரின் வருமானத்திற்கு செலவுவைக்கப்பட்ட பெறுமதி | 103,066,101 | 100,283,185 |
| 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நில அளவைக் கட்டணமாக பொதுவைப்புக் கணக்கிலுள்ள மீதி | 292,372,522 | 92,753,686 |

(viii) அரசாங்க வருமானத்திலிருந்து செலவுசெய்தல் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் அடிக்கடி எச்சரிக்கை விடுவிக்கப்பட்டிருந்தும் திணைக்களம் 2014 ஆம் ஆண்டின் போதும் நில அளவைக் கட்டணமாக அறவிட்டிருந்த ரூபா 430,095,545 வருமானத்தில் ரூபா 292,372,522 தொகையானது ஊக்குவிப்பு படி, போக்குவரத்துச் செலவுகள், எரிபொருள் மற்றும் ஏனைய செலவுகளாக செலுத்தப்பட்டிருந்தது.

(ix) விசேட செயற்திட்டத்திற்கான நில அளவைக் கட்டணமாகக் கிடைத்த பணம் நில அளவையாளர் நாயகத்தின் வருமானத்திற்கு செலவுவைக்கப்படுவதுடன் அந்த நில அளவைச் செயற்பாடு ஊக்குவிப்பு படியின் கீழ் நிறைவேற்றப்படுவதாக இருந்தால் 1/2009 ஆம் இலக்க ஊக்குவிப்பு படி சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஊக்குவிப்பு படி செலுத்துவதற்குத் தேவையான

பணத்திற்காக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுவதாக கணக்காய்வு ஐயவினாவிற்கான பதிலாகக் காட்டப்பட்டிருந்தது. அச்செலவு விடயங்களின் கீழ் ஊக்குவிப்பு படியாக ரூபா 16,528,181 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய செலவு விடயத்திற்கு வரவுவைக்கப்படாது நில அளவைக் கட்டண வருமானத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த ஊக்குவிப்பு படிப் பெறுமதி ரூபா 85,542,690 ஆக இருந்தது.

**6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 28801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 13,852,006 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் 06 மாதங்களிலிருந்து 32 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக காணப்பட்டு வந்தன. அந்த நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கையானது பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் ரூபா 6,992,084 ஆகக் காணப்பட்டதுடன் அம்மீதிகளை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 மற்றும் 4.4 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்த்துவைப்பதற்கு திணைக்களம் தவறியுள்ளது.

(இ) சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,982,025 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. அவற்றில் ரூபா 3,451,791 தொகை அல்லது 69 சதவீதமானவை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் மீதியாகும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அம்மீதிகளை அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியுள்ளது.

(ஈ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் 1.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,484,705 தொகையான நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டில் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு 2 வாகனங்கள் முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தன.

### (ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்கு வன வளங்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் 4 வாகனங்களும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் 17 வாகனங்களும் வழங்கப்பட்டிருந்தும் அவை வழங்கப்பட்ட திகதிகள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் அவ்வாகனங்களை முறையாக உரிமை மாற்றிப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிம்சவியவின் கீழுள்ள நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 217 மில்லியன் செலவுசெய்து கொள்வனவு செய்யப்பட்ட நில அளவை உபகரணங்களை உள்ளடக்கிய நானாவித மூலதனச் சொத்துக்கள் மற்றும் ரூபா 82 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட திணைக்களத்தின் கட்டிடங்கள் என்பன காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சிடமிருந்து உரிமைமாற்றம் செய்து பெற்றுக்கொள்ளாது பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(இ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத ஒரு ஆண்டிற்கு குறைந்த காலமாகக் காணப்படுகின்ற பொறுப்புக்கள் ரூபா 6,047,316 ஆகும்.

**6.6 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் எல்லைக் கல் பதிக்கும் நில அளவைகளின் இலக்கு 52,156 காணித்துண்டுகளாக இருந்த போதிலும் அது செயலாற்றல் அறிக்கையில் 40,489 காணித்துண்டுகளாகக் காட்டப்பட்டிருந்தன. அதற்கிணங்க 35,772 காணித்துண்டுகள் அதாவது 69 சதவீதம் மாத்திரம் நில அளவை செய்யப்பட்டிருந்தது.

(ii) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 97 பிரிவுகளில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2014 ஆம் ஆண்டின் இறுதிவரை 05 பிரிவுகளில் மாத்திரம் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

(iii) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகள் அளவீடுசெய்யப்பட்டு நன்கொடைப் பத்திரம் வழங்குவதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைக்கப்பெற்ற வரைபட வேண்டுதல்களின் எண்ணிக்கையில் 16,595 வரைபடங்கள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டன. மேலும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிக் காணப்பட்ட எண்ணிக்கை 77,145 ஆகும். 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் வரைபடங்கள் வழங்கும் இலக்கு காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

------------------

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையில் நானாவித நில அளவைகள் மற்றும் காணி சுவீகரித்தல் நில அளவைகளின் செயல்முன்னேற்றம் முறையே 280 மற்றும் 219 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது மேற்கூறிய நில அளவைகளுக்காக குறைந்த இலக்குகள் பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**6.7 முகாமைத்துவ பலவீனம்**

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊக்குவிப்பு படிகள் செலுத்தும் போது நில அளவையாளர் ஒருவர் மாதாந்தம் நிறைவேற்றப்படவேண்டிய ஆகக்குறைந்த வேலைகளின் அளவு (Monthly Norms) தீர்மானிக்கப்பட்டிருந்தும் ஒரு மாதத்திற்கு ஊக்குவிப்பு படிகள் செலுத்துவதற்காக செய்யப்படவேண்டிய உச்ச அளவான காணித்துண்டுகளின் எண்ணிக்கை அல்லது தொடக்கச் சம்பளத்தின் சதவீதமாகச் செலுத்தக்கூடிய எல்லை தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டுவரை ஊக்குவிப்பு படியும் மேற்பார்வைக் கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, 2014 ஆம் ஆண்டின் போது ஊக்குவிப்பு படியும் மேற்பார்வைக் கட்டணமுமாக மாத்திரம் அவர்களின் வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் போல் இரண்டு மடங்கையும் மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| வருடாந்த அடிப்படைச் சம்பளத்தில் சதவீத அளவு | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 50-99 | 97 |
| 100-149 | 44 |
| 150-199 | 28 |
| 200 இற்கு மேல் | 38 |

(ஆ) நிகழ்காலத்தில் நில அளவைச் செயற்பாடு மிகவும் முன்னேற்றகரமான தொழில்நுட்ப உபகரணத்தைப் போல சந்திரிகா மற்றும் கணனி தொழில்நுட்பம் ஆகிய முறைமையை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை திணைக்களத்தின் மூலம் போதியளவான நில அளவை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. முப்பது ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த

முறைமையாகிய நில அளவையாளர் ஒருவரினால் ஒரு மாதத்திற்கு நில அளவை செய்யவேண்டிய ஆகக்குறைந்த காணித்துண்டுகளின் எண்ணிக்கை 30 என்ற எல்லைக்கு உட்பட்டு நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் காலத்துக்கு பொருத்தமற்றதாக உள்ளதனால் ஊக்குவிப்பு படிகள் செலுத்துவதின் முறையற்ற நிலைமைக்கு அது பிரதான தாக்கமளித்திருந்தது.

**6.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 243 | 119 | 124 |
| (ii) | மூன்றாம் நிலை | 959 | 888 | 71 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,341 | 1,064 | 277 |
| (iv) | ஆரம்ப நிலை | 4,871 | 3,520 | 1,351 |
| | மொத்தம் | 7,414 | 5,591 | 1,823 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 1,823 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 7. தலைப்பு 327 – காணிப்பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

### 7.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாதிருந்தமை

திணைக்களம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரையாகப் பேணாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 7.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 7.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு செலவு விடயத்திற்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச்செலவு விடயத்திற்குரிய நிதி ஏற்பாட்டில் 38 சதவீத அளவினைக் கொண்டிருந்தது.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் செயலமர்விற்காக உணவு, தங்குமிட வசதிகள் மற்றும் ஞாபகார்த்த சஞ்சிகை அச்சிடல் ஆகிய மீண்டுவரும் தன்மையான ரூபா 1,892,849 தொகையான செலவுகளும் 2014 பெப்ரவரி மற்றும் செப்தெம்பர் மாதங்களின் போது 45 சந்தர்ப்பங்களில் ரூபா 815,576 கூட்டுமொத்தமான உபசரிப்புச் செலவுகளும் மூலதன செலவு விடயங்களிலிருந்து செலவு செய்யப்பட்டிருந்தன.

#### 7.2.2 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தோட்டப் பயிர்களை படமெடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 10,000,000 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 4,600,000 தொகையானது மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அந்த நிதி ஏற்பாட்டில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்காக ரூபா 3,682,377 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளாததன்

காரணமாக உரிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக செலவுசெய்யப்பட்ட அனைத்து செலவுகளையும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) திணைக்களத்திற்கு கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக காணி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 25 மில்லியன் நிதி ஏற்பாட்டில் மாவட்ட செயலகங்களுக்கு ரூபா 8.878 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் தலைமை அலுவலகம் ரூபா 9.569 மில்லியன் செலவு செய்திருந்தும் மாவட்ட செயலகங்களினால் செய்யப்பட்ட செலவு 2015 யூலை 21 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு வழங்கப்படாதிருந்ததனால் அனைத்து செலவுகளையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

## 7.3 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 166,125 கூட்டுமொத்தமான 2 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

32701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 651,607 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளுக்காக 01 ஆண்டிலிருந்து 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதி எடுத்திருந்தும் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 7.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 7.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டிற்கான 2013 திசெம்பர் 30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள இலக்குகள் திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் திருத்தம் செய்யப்பட்ட திகதி கணக்காய்விற்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 7.5.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (இ) வழிகாட்டியின் பிரகாரம் அடுத்துவரும் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் விபரமாகத் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தில் ரூபா 610,042 தொகை செலவு செய்து ஞாபகார்த்த சஞ்சிகை அச்சிடல், ரூபா 143,640 செலவு செய்து மதில் சுவரில் சித்திரம் வரைதல், ரூபா 1,870,178 செலவு செய்து வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை கலந்துரையாடும் செயலமர்வை நடாத்துதல் என்பன தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.5.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் தலைமை அலுவலகத்திலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் பிராந்திய அலுவலகங்களிலும் உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

## 7.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| (i) | கணனியும் துணைக் கருவிகளும் | 136 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ii) | அலுவலக உபகரணங்கள் | 130 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (iii) | தளபாடங்களும் பொருத்திகளும் | 79 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |
| (iv) | ஏனைய சொத்துக்கள் | 1,589 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை |

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

---

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான 21 வாகனங்கள் திணைக்களத்தினால் முறையாகப் பொறுப்பேற்கப்படாது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

---

திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு குறைந்த தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 1,402,540 ஆகும்.

## 7.7 இணக்கமின்மைகள்

---

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) அரச நிதிச் சுற்றறிக்கை | | |
| 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க சுற்றறிக்கை | 610,042 | ஞாபகார்த்த சஞ்சிகையை அச்சிடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலை மனுக்கள் 03 சந்தர்ப்பங்களின் போது திருத்தப்பட்டிருந்தன. அரசாங்கத் துறையின் பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளின் கொள்வனவு மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது அனைத்து |

விடயங்களையும் கருத்தில் கொண்டு முடியுமான வரை சரியாக மொத்த கிரய மதிப்பீட்டை தயாரிப்பதற்கு அரசாங்க நிறுவனங்கள் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய பாதீட்டு சுற்றுநிருபம்

| | | | |
|---|---|---|---|
| (i) | 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 1.1.6 மற்றும் 1.1.7 ஆம் பந்திகள் | 345,266<br>389,880 | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 345,266 தொகையாகவும் இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 389,880 தொகையாகவும் இருந்தும் சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2014 சனவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க சுற்றுநிருபத்திலுள்ள 2.2.2 ஆம் பந்தி | | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவதை அடிப்படை குறிக்கோளாகக் கொண்டு நடாத்தப்பட்ட செயலமர்விற்காக ரூபா 1,870,178 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட அடிப்படைக் குறிக்கோளுக்குப் புறம்பான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (iii) | 2014 சனவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2.1.5 ஆம் பந்தி | | உரிய அமைச்சு செயலாளரின் சிபாரிசு மற்றும் திறைசேரியின் இணக்கப்பாடு இல்லாது 330 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 500 படியும், 4 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 425 படியும், 4 அலுவலக உதவியாளர்களுக்கு ரூபா 350 படியும் ரூபா 218,100 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 7.8 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக திணைக்களத்திற்கு ரூபா 25 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 13.4 மில்லியன் அளவானவை பயன்படுத்தப்பட்டிருந்ததனால் சேமிப்பு 46 சதவீதமாக இருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 05 செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் பிராந்திய மட்டத்தில் நலன் பெறுனர் குழுக்களை விழிப்புணர்வு செய்தல்கள் 79 இலக்கிடப்பட்டிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(iii) 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கற்றபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 23.455 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தும் ரூபா 25 மில்லியன் நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் ரூபா 1.545 மில்லியன் மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தும் செயல்முன்னேற்றமானது செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இணக்கம் செய்யக்கூடிய வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.9 செயலாற்றல்**

---------------------

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது 03 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 66 சதவீதத்திலிருந்து 39 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் 04 செயற்பாடுகளின் இலக்கிடப்பட்ட அலகு எண்ணிக்கைக்கும்

மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் இலக்கிடப்பட்ட அலகு எண்ணிக்கைக்குமிடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

**7.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளுக்கு முரணானவைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் அனைத்து இணைந்த செலவுகளையும் உள்ளடக்கிய மொத்த கிரய மதிப்பீடானது கொள்வனவு நிறுவனங்களினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் ஞாபகார்த்த சஞ்சிகை அச்சிடலுக்காக ரூபா 610,042 செலவு செய்யப்பட்டிருந்தும் அதற்கான மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைத்த பொருட்கள் மற்றும் சேவைகள் ஒப்பந்தத்தின் போது திணைக்களத்திற்கும் வழங்குனர்களுக்குமிடையே முறைப்படியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் ஞாபகார்த்த சஞ்சிகை அச்சிடுவது தொடர்பில் வழங்குனர்களுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**7.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற முறையில் இடம்பெற்றிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான ஞாபகார்த்த சஞ்சிகையை அச்சிடுவதற்காக ரூபா 610,042 செலவுசெய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் விலைகளின் அதிகரிப்பிற்காக கொள்வனவு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வழங்குனரினால் ஞாபகார்த்த சஞ்சிகை அச்சிடப்பட்டு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும் ஞாபகார்த்த சஞ்சிகையை அச்சிடும் போது தேவையான பக்கங்களின் எண்ணிக்கை, அச்சிடப்பட வேண்டிய அளவு, அதில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் என்ன என்பவை தொடர்பாக மேல் மட்ட முகாமைத்துவத்தால் உரிய

முறையில் ஆய்வுகள் செய்யப்பட்டிராததுடன். வினைத்திறனற்ற முறையில் அரசாங்க நிதி பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படுகின்றது.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக கலந்துரையாடும் செயலமர்விற்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கான உணவு மற்றும் தங்குமிடத்திற்காக ரூபா 874,070 செலவு செய்யப்பட்டிருந்தும் அச்செயலமர்வில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்தும் பதிவேடு முறைப்படியாக பேணப்படாமையால் அச்செலவுகளின் வெளிப்படைத் தன்மையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தைப் பற்றி கலந்துரையாடுவதற்கான நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒரு மணித்தியாலம் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தமையால் இச்செயலமர்வு நடாத்தப்பட்டிருந்தமை அச்செயற்பாட்டை அடைந்து கொள்வதற்காக அல்ல என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 7.12 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 9 | 4 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 26 | 15 | 11 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 547 | 496 | 56 | 05 |
| (iv) | ஆரம்ப நிலை | 91 | 62 | 29 | - |
| | மொத்தம் | 77 | 582 | * 00 | 05 |

* மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 100 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மிகைப்பதவிகளின் எண்ணிக்கை 05 ஆக இருந்தும் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.